ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது

අංක 2138/3 - 2019 අගෝස්තු මස 26 වැනි සඳුදා - 2019.08.26
*2138/3 ஆம் இலக்கம் - 2019 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 26 ஆந் திகதி திங்கட்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I)- பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

### சம்பளச் சபைகள் கட்டளைச் சட்டம்

**அறிவித்தல்**

**ஆரம்பப் பாடசாலைச் சேவைத் தொழில்**

(136 ஆம் அத்தியாயமாகிய) சம்பளச் சபைகள் கட்டளைச் சட்டத்தின் 33 (1) (அ) ஆம் பிரிவின் கீழ், கௌரவ தொழில் அமைச்சர் அவர்களினால் கட்டளையிடப்பட்டு 2000 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 21 ஆந் திகதிய 1120/3 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட கட்டளையினால் தொழில் ஆணையாளருக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரத்திற்கு ஏற்ப மேலே கூறப்பட்டுள்ள கட்டளைச் சட்டத்தின் 33 (2) ஆம் பிரிவின் கீழ், ஆரம்பப் பாடசாலைத் தொழிலில் ஈடுபட்டுள்ள ஆசிரியர்கள், உதவியாளர்கள் தொடர்பாகக் கீழ்க் காணப்படும் அட்டவணையிற் காட்டப்பட்டுள்ள குறைந்தபட்ச சம்பள அளவு தொடர்பாக எடுக்கப்பட்டுள்ள தீர்மானங்கள் கௌரவ தொழில் உறவுகள், மனிதவலு அமைச்சரினால் அனுமதிக்கப்பட்டுள்ளதென மேற்கூறப்பட்ட கட்டளைச் சட்டத்தின் 33 (3) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 29 (3) ஆம் பிரிவின் கீழ் இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

இத் தீர்மானங்கள் 2019 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 01 ஆந் திகதியிலிருந்து நடைமுறைக்கு வருவனவாகும்.

ஆர். பி. ஆர். ராஜபக்ச,
செயலாளர்,
தொழில் மற்றும் தொழிற்சங்க உறவுகள் அமைச்சு.

தொழில் மற்றும் தொழிற்சங்க உறவுகள் அமைச்சு,
கொழும்பு 05,
2019, ஓகத்து 20.

1 A - PG 4629 - 207 (2019/ 08)
*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

**அட்டவணை**

*தொழில் ஆணையாளரினால் ஆரம்பப் பாடசாலைச் சேவைத் தொழில் தொடர்பாக ஆசிரியர்கள், உதவியாளர்களுடைய நேர வேலைக்கான ஆகக் குறைந்த சம்பளம் தொடர்பாக 2000 ஆம் ஆண்டு யூன் மாதம் 30 ஆந் திகதிய 1138 ஆம் இலக்க, இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட அறிவித்தலில் காணப்படும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டவற்றை காலத்திற்குக் காலம் வேறுபடுத்தப்பட்டவையும், கடைசியாக 2013 ஆம் ஆண்டு சனவரி மாதம் 22 ஆந் திகதிய 1794/11 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட அறிவித்தலின் மூலம் வேறுபடுத்தப்பட்டவையுமான தீர்மானங்கள் அட்டவணைக்குப் பதிலாக பின்வரும் அட்டவணையைப் பிரதியீடு செய்வதன் மூலம் மேலும் வேறுபடுத்தப்படுதல் வேண்டும்.*

| முதலாவது நிரல் (பிரதேசம்) | இரண்டாவது நிரல் (தொழில்) | மூன்றாவது நிரல் (ஆகக் குறைந்த மாதாந்த சம்பளம்) |
|---|---|---|
| மாநகர சபை எல்லையினுள் | (அ) ஆசிரியர்கள் | ரூபா 13,500.00 |
| | (ஆ) உதவியாளர்கள் | ரூபா 11,500.00 |
| நகர சபை எல்லையினுள் | (அ) ஆசிரியர்கள் | ரூபா 12,750.00 |
| | (ஆ) உதவியாளர்கள் | ரூபா 11,000.00 |
| பிரதேச சபை எல்லையினுள் | (அ) ஆசிரியர்கள் | ரூபா 11,250.00 |
| | (ஆ) உதவியாளர்கள் | ரூபா 10,000.00 |

*மேலே (ஆ) குறியீட்டினால் காட்டப்பட்டுள்ள சேவைகளும், மேலே (அ) குறியீட்டினால் காட்டப்பட்டுள்ள சேவைகளுடன் தொடர்புடைய தற்காலிக அல்லது வேறு யாதாயினும் சேவைகள் இருப்பின் அவைகளும் இதில் அடங்கும்.*

*9 - 316/1*

---

## சம்பளச் சபைகள் கட்டளைச் சட்டம்

### அறிவித்தல்

### கண்ணாடிப் பொருட்கள் உற்பத்தித் தொழில்

*கண்ணாடிப் பொருட்கள் உற்பத்தித் தொழிலுக்கான சம்பளச் சபையானது (136 ஆம் அத்தியாயமாகிய) சம்பளச் சபைகள் கட்டளைச் சட்டத்தின் 33 (1) (அ) ஆம் பிரிவின் கீழ், கௌரவ தொழில் அமைச்சர் அவர்களினால் கட்டளையிடப்பட்டு 1979 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 12 ஆந் திகதிய 58 ஆம் இலக்க, வர்த்தமானியில் பிரசுரமான கட்டளையினால் தொழில் ஆணையாளருக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரத்திற்கு இணங்க, மேலே கூறப்பட்டுள்ள கட்டளைச் சட்டத்தின் 33 (2) ஆம் பிரிவின் கீழ், கண்ணாடிப் பொருட்கள் உற்பத்தித் தொழிலில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களுக்கு இவ்வறிவித்தலுக்கான அட்டவணையிலே கூறப்பட்டுள்ள நேர வேலைக்கான கீழெல்லைச் சம்பள அளவு தொடர்பான தீர்மானம், கௌரவ தொழில் மற்றும் தொழிற்சங்க உறவுகள் அமைச்சர் அவர்களால் அங்கீகரிக்கப்பட்டுள்ளன என அக்கட்டளைச் சட்டத்தின் 33 (3) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 29 (3) ஆம் பிரிவின் கீழ் இத்தால் அறிவிக்கப்படுகின்றது.*

*இத் தீர்மானங்கள் 2019 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 01 ஆந் திகதியிலிருந்து நடைமுறைக்கு வருவனவாகும்.*

*ஆர். பி. ஆர். ராஜபக்ச,*
*செயலாளர்,*
*தொழில் மற்றும் தொழிற்சங்க உறவுகள் அமைச்சு.*

*தொழில் மற்றும் தொழிற்சங்க உறவுகள் அமைச்சு,*
*கொழும்பு 05,*
*2019, ஓகத்து 20.*

**அட்டவணை**

*தொழில் ஆணையாளரால் கண்ணாடிப் பொருட்கள் உற்பத்தி தொழிலில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களின் நேர வேலைக்கான ஆகக் குறைந்த வேதனத்திற்காக 1980 ஆம் ஆண்டு யூன் மாதம் 26 ஆந் திகதிய 94/6 ஆம் இலக்க, இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும், காலத்திற்குக் காலம் வேறுபடுத்தப்பட்டதும், கடைசியாக 2013 ஆம் ஆண்டு சனவரி மாதம் 22 ஆந் திகதிய 1794/11 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட அறிவித்தல் மூலம் வேறுபடுத்தப்பட்டதுமான முடிவுகள் அவ்வட்டவணைக்குப் பின்வரும் புதிய பகுதியினை பதிலீடு செய்வதன் மூலம் மேலும் வேறுபடுத்தப்படுதல் வேண்டும்.*

I ஆம் நிரலிற் குறித்துரைக்கப்பட்டுள்ளவர்களான கண்ணாடிப் பொருட்கள் உற்பத்தித் தொழிலிலுள்ள தொழிலாளர்களுக்குப் பொருத்தமான நேர வேலைக்கான கீழெல்லைச் சம்பள விகிதங்கள் அவர்களுக்கெதிராக II ஆம் நிரலில் குறித்துரைக்கப்பட்டுள்ளவாறிருத்தல் வேண்டும்.

| | நிரல் I<br>தொழிலாளர் வகுப்பு | நிரல் II<br>சாதாரண வேலைநாள் ஒன்றிற்குரிய ஆகக் குறைந்த சம்பள வீதம் (ரூபா) |
|---|---|---|
| (அ) | ஊதலுருவம் செய்வோர், இயந்திரங்கள் இயக்குவோர் | 675.00 |
| (ஆ) | இயந்திரங்கள் இயக்குவோருக்கு உதவுவோர், குமிழ் உருவம் செய்வோர், வெட்டுவோர், ஊதலுருவம் செய்வோருக்கு உதவுவோரும் சூளையாளருக்கு உதவுவோரும் | 600.00 |
| (இ) | உருக்கி மட்டஞ்செய்வோர், வாயு செலுத்துவோர், அழுத்துநர், குமிழ் உருவம் செய்வோருக்கு உதவுவோர் | 570.00 |
| (ஈ) | கனிஷ்ட குமிழ் உருவம் செய்வோர், உருவத்தினை சமநிலை செய்வோர், கடைச்சற்காரர், எண்ணுவோர் | 550.00 |
| (உ) | கண்ணாடி வெட்டுவோர், சிமினி வெட்டுவோர், மட்டமாக்குவோர் | 530.00 |
| (ஊ) | அடுக்கிக் கட்டுவோர், கொண்டுசெல்வோர் | 500.00 |

*9 - 316/2*

---

## சம்பளச் சபைகள் கட்டளைச் சட்டம்

### அறிவித்தல்

### பீடி உற்பத்தித் தொழிலுக்கான சம்பளச் சபை

பீடி உற்பத்தித் தொழிலுக்கான சம்பளச் சபையானது (136 ஆம் அத்தியாயமாகிய) சம்பளச் சபைகள் கட்டளைச் சட்டத்தின் 33 (1) (அ) ஆம் பிரிவின் கீழ், கௌரவ தொழில் அமைச்சர் அவர்களினால் கட்டளையிடப்பட்டு 2015 ஆம் ஆண்டு மே மாதம் 27 ஆந் திகதிய 1916/13 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரமான கட்டளையினால் தொழில் ஆணையாளருக்கு வழங்கப்பட்ட அதிகாரத்திற்கு இணங்க, அவர்களால் மேற்கூறப்பட்ட கட்டளைச் சட்டத்தின் 33 (2) ஆம் பிரிவின் கீழ், பீடி உற்பத்தித் தொழிலில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களுக்கு இவ்வறிவித்தலுக்கான அட்டவணையிலே கூறப்பட்டுள்ள துண்டு வேலைக்கான கீழெல்லைச் சம்பள அளவு தொடர்பான தீர்மானம், கௌரவ தொழில் மற்றும் தொழிற்சங்க உறவுகள் அமைச்சர் அவர்களால் அங்கீகரிக்கப்பட்டுள்ளன என அக்கட்டளைச் சட்டத்தின் 33 (3) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 29 (3) ஆம் பிரிவின் கீழ் இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

இத் தீர்மானங்கள் 2019 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 01 ஆந் திகதியிலிருந்து நடைமுறைக்கு வருவனவாகும்.

ஆர். பி. ஆர். ராஜபக்ச,
செயலாளர்,
தொழில் மற்றும் தொழிற்சங்க உறவுகள் அமைச்சு.

தொழில் மற்றும் தொழிற்சங்க உறவுகள் அமைச்சு,
கொழும்பு 05,
2019, ஓகத்து 20.

**அட்டவணை**

*பீடி உற்பத்தித் தொழிலுக்கான சம்பளச் சபையினால் ஆக்கப்பட்டு, 1957 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 29 ஆந் தேதிய 11208 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட அறிவிப்பிற்கான அட்டவணையிற் தரப்பட்டுள்ளவையும், காலத்திற்குக் காலம் வேறுபடுத்தப்பட்டுள்ளவையுமான முடிபுகள், 2012 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 18 ஆந் திகதிய 1789/19 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானி அறிவிப்பின் மூலம் கடைசியாக வேறுபடுத்தப்பட்டுள்ளன. 2015 ஆம் ஆண்டின் மே மாதம் 27 ஆந் திகதிய 1916/13 ஆம் இலக்க, வர்த்தமானி அறிவித்தலின் மூலம் சம்பளச் சபையின் ஆகக் குறைந்த சம்பளத்தினைத் தீர்மானிப்பதற்கு தொழில் ஆணையாளருக்கு அளிக்கப்பட்ட அதிகாரத்தின் மூலம் அவ்வட்டவணையின் II ஆம் பாகத்திற்கு உரிய முடிவுகளுக்குப் பதிலாக பின்வரும் புதிய பாகத்தினை இடுவதன் மூலம் மேலும் வேறுபடுத்தப்படுதல் வேண்டும்.*

**II ஆம் பாகம்**

**துண்டு வேலைக்குரிய ஆகக் குறைந்த சம்பள வீதங்கள்**

*(பீடி சுருட்டுவதற்குச் சுற்றிலைகளைத் தயாரித்தல், சுற்றும் இலைகளை வெட்டுதல், சுற்றிலைகளுள் "பீடிப் புகையிலையை" நிரப்புதல், பீடி சுருட்டுதல், சுருட்டிய பீடிகளைக் கட்டுதல் ஆகியன உட்பட) பீடி சுருட்டுவதற்குத் துண்டு வேலைக்குரிய கீழெல்லைச் சம்பள வீதங்கள் பின்வருமாறு இருத்தல் வேண்டும் :*

| | | ரூ. ச. |
|---|---|---|
| (அ) | 2 அங்குலத்திற்கு மேற்படாத நீளமுள்ள 1000 பீடிகளுக்கு | 400.00 |
| (ஆ) | 2 அங்குலத்திற்கு மேற்பட்ட ஆனால் 3 அங்குலத்திற்கு உட்பட்ட நீளமுள்ள 1000 பீடிகளுக்கு | 450.00 |
| (இ) | 3 அங்குலத்திற்கு உட்படாத நீளமுள்ள 1000 பீடிகளுக்கு | 490.00 |

*(சுற்றிலைகளுக்குள் பீடிப் புகையிலையை நிரப்புதல், பீடி சுருட்டுதல், சுருட்டிய பீடிகளைக் கட்டுதல் ஆகியன உட்பட ஆனால் சுருட்டுவதற்குச் சுற்றிலைகளைத் தயாரித்தலும் சுற்றும் இலைகளை வெட்டுதலும் நீங்கலாக) பீடி சுருட்டுவதற்குத் துண்டு வேலைக்குரிய ஆகக் குறைந்த சம்பள வீதங்கள் பின்வருமாறு இருத்தல் வேண்டும் :*

| | | ரூ. ச. |
|---|---|---|
| (அ) | 2 அங்குலத்திற்கு மேற்படாத நீளமுள்ள 1000 பீடிகளுக்கு | 300.00 |
| (ஆ) | 2 அங்குலத்திற்கு மேற்பட்ட ஆனால் 3 அங்குலத்திற்கு உட்பட்ட நீளமுள்ள 1000 பீடிகளுக்கு | 340.00 |
| (இ) | 3 அங்குலத்திற்கு உட்படாத நீளமுள்ள 1000 பீடிகளுக்கு | 375.00 |

*(சுருட்டுவதற்குச் சுற்றிலைகளைத் தயாரித்தல் உட்பட) சுற்றும் இலைகளை வெட்டுதற்குத் துண்டு வேலைக்குரிய ஆகக் குறைந்த சம்பள வீதங்கள் பின்வருமாறு இருத்தல் வேண்டும் :*

| | | ரூ. ச. |
|---|---|---|
| (அ) | 2 அங்குலத்திற்கு மேற்படாத நீளமுள்ள 1000 பீடிகளுக்கு | 200.00 |
| (ஆ) | 2 அங்குலத்திற்கு மேற்பட்ட ஆனால் 3 அங்குலத்திற்கு உட்பட்ட நீளமுள்ள 1000 பீடிகளுக்கு | 220.00 |
| (இ) | 3 அங்குலத்திற்கு உட்படாத நீளமுள்ள 1000 பீடிகளுக்கு | 230.00 |

*சுருட்டிய பீடிகளைச் சுற்றி வட்ட நாம விலாசம் ஒட்டுவதற்கு துண்டு வேலைக்குரிய ஆகக் குறைந்த சம்பள வீதம் 1000 பீடிகளுக்கு 50.00 ரூபாவாக இருத்தல் வேண்டும்.*

*9 - 316/3*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது.